**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 52/2024**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | ரவீந்திரன்(PW3) | | |
| Father's Name | பரமசிவம் | தொழில் | |
| Village | திருமுருகன்பூண்டி | | |
| Taluk | அவிநாசி | Age | **52** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd **day of July 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு கார்பெண்டர் ஆக வேலை செய்து வருகிறேன். கடந்த 30.06.2023ம் தேதி மதியம் 12 மணி அளவில் நான் வீட்டில் இருந்தபோது இவ்வழக்கில் இறந்து போன தன மோகனின் அம்மா சென்னையில் இருந்து எனக்கு போன் செய்து, ஏவிபி ஸ்கூலுக்கு அருகில் தன மோஹனுக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் அவரை போய் பார்க்கும் படியும் சொன்னார்கள். நான் விபத்து நடந்த இடத்திற்கு போவதற்குள் அவரை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்று விட்டார்கள் நான் திருப்பூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது அவர் இறந்து இருந்தார். அவரது பிரேத விசாரணையின் போது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் மருத்துவமனை சென்று இறந்தவரின் உடலை பார்த்தேன். அவர் எனக்கு தூரத்து உறவினர். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |